DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 125/2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 6 தமிழரசன்** |
| Father's Name | சாம்பசிவம் |
| Village | மேல்களவாய் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 20/12/2024

**முதல் விசாரணை**

நான் சங்கமம் கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. போலிசார் சம்பவ இடம் வந்து என்ன நடந்நதது என மட்டும் கேட்டார் கையொப்பம் எதுவும் வாங்கவில்லை.

( சாட்சியை செஞ்சி காவல் நிலைய தலைமை காவலர் 1952 திருமதி.கலையரசி என்பவர் அடையாளம் காண்பித்தார்)

**(இந்நிலையில் இந்தசாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யவேண்டுமென அரசு துறை வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்)**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

கடந்த 18.01.2022ந் தேதி 16.00 மணியளவில் நானும், எங்கள் கிராமத்தை சேர்ந்த காண்டீபன் என்பவரும் எங்கள் ஊர் கால்வாய் தெருவில் நின்று பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்பொழுது அபுபக்கர் என்பவர் வீட்டருகே போலிசார் விசாரணை செய்துகொண்டிருந்ததாகவும், நாங்கள் அவர்களிடம் சென்று என்னவென்று

விசாரித்தபோது எங்கள் ஊரை சேர்ந்த அபுபக்கர், அவரது தம்பி அமீர்பாஷா, அனீபா, மற்றும் முகமது அலி ஆகியோரை தாக்கியது சம்மந்தமாக அக்பர் கொடுத்த வாக்குமூலத்தின் பேரில் வழக்கு பதிவு செய்துள்ளதாகவும் அது சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்வதாகவும் அதற்கு எங்கள் இருவரையும் சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டதாகவும் அதற்கு நாங்கள் இருவரும் சம்மதித்து மேற்படி சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் முதலாவதாக காண்டீபன் என்பவரும், இரண்டாவதாக நானும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் எனது முகவரியை நான் கொடுத்தேன் என்றால் சரிதான்.